இன்றைய வேளாண் செய்திகள்

25.03.2013 A.M

## விவசாயிகளின் கால்நடைகளுக்கு மானிய விலையில் தீவனம்: அமைச்சர்

காவிரி டெல்டா பாசன விவசாயிகளின் கால்நடைகளுக்கு மானிய விலையில் கால்நடை தீவனம் வழங்கும் நிகழ்ச்சியை தமிழக சுற்றுச்சூழல்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் தொடங்கி வைத்தார்.

சிதம்பரம் அருகே உள்ள வயலூர் கிராமத்தில் காவிரி டெல்டா பாசனப் பகுதி விவசாயிகளுக்கு மானிய விலையில் கால்நடை தீவனங்கள் வழங்கும் விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

விழாவில், தமிழக சுற்றுச்சூழல்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் பங்கேற்று விவசாயிகளுக்கு மானிய விலையில் தீவனங்களை வழங்கி அவர் பேசியது:

தமிழக முதல்வரால் அறிவிக்கப்பட்ட காவிரி கூடுதல் வறட்சி நிதி உதவி திட்டத்தின் கீழ் கடலூர் மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர் சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு மானிய உதவியுடன் கால்நடை தீவனங்கள் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்தில் உள்ள 284 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் 11074 அங்கத்தினர்களின் கறவை மாடுகளுக்கு தீவனத்தின் விலையில் கிலோ ஒன்றுக்கு ரூ.4 மானியமாக வழங்கப்படுகிறது.

இத்தீவனம் கடலூர் மாவட்டத்தில் 9 சங்கங்களில் இறக்கப்பட்டு, அனைத்து செயல்படும் சங்கங்களுக்கும் வழங்கப்படும்.

மேலும் பால் உற்பத்தியை அதிகரிக்க 50 சதவீத மானிய உதவியுடன் நுண் தாது உப்புக்கலவையும் வழங்கப்படும் என அமைச்சர் எம்.சி.சம்பத் தெரிவித்தார்.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அதிகாரி ஜே.ராஜேந்திரன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் செல்விராமஜெயம் (புவனகிரி), நாக.முருகுமாறன் (காட்டுமன்னார்கோவில்), முன்னாள் எம்.எல்.ஏ. அருண்மொழிதேவன், ஒன்றியக் குழுத் தலைவர்கள் வி.ஆர்.ஜெயபாலன் (கீரப்பாளையம்), கே.ஏ.பாண்டியன் (குமராட்சி), மக்கள் - தொடர்பு அதிகாரி

கு.தமிழ்செல்வராஜன், ஆவின் டாக்டர் எஸ்.சுந்தரேசன், துணைப் பதிவாளர் (பால்வளம்) டி.பாலசுந்தரம், ஊராட்சி மன்றத் தலைவர் உத்திராபதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மாவட்டத்தில் கருகிய பயிர்களைப் பார்வையிட்ட அதிகாரி

வடகிழக்குப் பருவ மழையின்றி பாதிக்கப்பட்ட கிராமங்களில் விவசாய நிலங்களை ராமநாதபுரம் மாவட்ட கணிப்பாய்வு அலுவலரும் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை முதன்மை செயலருமான நிரஞ்சன் மார்டி ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்தார்.

இந்த ஆண்டு வடகிழக்குப் பருவ மழை பொய்த்ததால் ராமநாதபுரம் மாவட்டத்தில் 1,04,563 ஹெக்டேர் நெல் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட கிராமங்களான நாரல், பத்தனேந்தல், சோழாந்தூர், வடவயல், ஆவாரேந்தல், ஊரணகுடி

ஆகிய பகுதிகளில் கருகிய நிலையில் உள்ள பயிர்களை கணிப்பாய்வு அலுவலர் நிரஞ்சன் மார்டி பார்வையிட்டார்.

ஆட்சியர் க.நந்தகுமாரிடம் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

உடன் மாவட்ட வருவாய் அதிகாரி விஸ்வநாதன், வேளாண் இணை இயக்குநர் சக்திமோகன், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் இளங்கோ மற்றும் வேளாண் துறை அதிகாரிகள் சௌந்தர்ராஜன், சுப்பிரமணியன், கமாலுதீன், ராமசாமிப்பாண்டியன் ஆகியோர் இருந்தனர்.

## வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விரைவில் நிவாரண நிதி

டெல்டா பகுதியை தவிர்த்து தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விரைவில் நிவாரண நிதி வழங்கப்படும் என தமிழக வேளாண்துறை அமைச்சர் செ.தாமோதரன் தெரிவித்தார்.

கோவை மாவட்டம், பொள்ளாச்சி அடுத்த புளியம்பட்டியில் தமிழக அரசின் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கும் விழா பொள்ளாச்சி சார் ஆட்சியர் ரேஸ்மி சித்தார்த் ஜெகதே தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

விழாவில் கலந்து கொண்டு விலையில்லாப் பொருட்களை வழங்கிய தமிழக வேளாண்துறை அமைச்சர் செ.தாமோதரன் பேசியது:

உலக அளவில் மந்தமான பொருளாதார நிலை நிலவினாலும் தமிழக மக்களின் நிலையைக் கருத்தில் கொண்டு புதிய வரிகள் ஏதும் விதிக்கப்படாத தமிழக பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த பட்ஜெட்டில் வேளாண்மை, கல்வி, மருத்துவம், மின் உற்பத்தி, சாலை வசதி, தொழில் வளர்ச்சி, உள்கட்டமைப்பு வசதி ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு உள்ளது.

ஆட்சிக்கு வந்த 2 ஆண்டு காலத்திற்குள் தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளில் 90 சதவீதத்தை தமிழக முதல்வர் நிறைவேற்றி உள்ளார். தமிழ்நாட்டில் ஏற்பட்ட வறட்சி காரணமாக சென்னை தவிர அனைத்து மாவட்டங்களையும் தமிழக முதல்வர் வறட்சி மாவட்டங்களாக அறிவித்துள்ளார்.

டெல்டா பகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரண நிதியாக ரூ.15 ஆயிரம் வழங்கப்பட்டு உள்ளது. இதே போல் தமிழகத்தில் உள்ள மற்ற மாவட்டங்களிலும் ஏற்பட்டுள்ள வறட்சியைக் கணக்கிட அமைச்சர்கள் கொண்ட உயர்நிலைக் குழுவை முதல்வர் அமைத்துள்ளார். இக்குழு தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பயிர்களின் பாதிப்பு குறித்து பார்வையிட்டு வருகிறது. பாதிப்பு குறித்தான அறிக்கையை முதல்வரிடம் வழங்கிய பின், விவசாயிகளுக்கு உரிய நிவாரண நிதி விரைவில் வழங்கப்படும் என்றார்.

இவ் விழாவில், 906 பேருக்கு இலவச மிக்ஸி, கிரணைடர், மின் விசிறிகள் வழங்கப்பட்டன. புளியம்பட்டியைச் சேர்ந்த 4 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. மேலும் புளியம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் ரூ.2 லட்சத்து 50 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட 5 புதிய கூடுதல் வகுப்பறை கட்டடத்தை அமைச்சர் செ.தாமோதரன் திறந்து வைத்தார்.

விழாவில் பொள்ளாச்சி சட்டப்பேரவை உறுப்பினர் எம்.கே.முத்துக்கருப்பண்ணசாமி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ராதாமணி, வடக்கு ஒன்றியக் குழுத் தலைவர் செல்வி பத்மினி, புளியம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் சுப்பிரமணியன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### மணிலா விவசாயிகளுக்கான தொழில்நுட்ப பயிற்சி முகாம்

கீழ்பென்னாத்தூர் வட்டார வேளாண் துறை சார்பில், மணிலா விவசாயிகளுக்கான தொழில்நுட்பப் பயிற்சி முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

கீழ்பென்னாத்துாரை அடுத்த ராஜாதோப்பு கிராத்தில் விதை கிராம திட்டத்தின் கீழ் நடைபெற்ற இப் பயிற்சி முகாமை கீழ்பென்னாத்தூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் அக்கண்டராவ் தொடங்கி வைத்தார்.

அவர் பேசுகையில், சித்திரை சிறப்புப் பட்டத்தில் மணிலா பயிர் செய்வது மிகவும் உகந்ததாகும். எனவே, மணிலா விவசாயிகள் இத் தருணத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். நெல், மணிலா விவசாயிகளுக்கான தொழில்நுட்பப் பயிற்சி 15 கிராமங்களில் நடைபெறுகிறது என்றார்.

முகாமில் கீழ்பென்னாத்தூர் வட்டார வேளாண் அலுவலர் பி.சண்முகவேல் மணிலா விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தார். இதேபோல கீக்களூர், மேக்களூர் கிராமங்களிலும் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி முகாமில், உதவி வேளாண் அலுவலர்கள் சேட்டு, பார்த்தசாரதி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## சின்ன வெங்காயம் சாகுபடி செயல்விளக்கம்

பாப்பாரப்பட்டியில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில், தருமபுரி மாவட்டம், அதகப்பாடியில் சின்ன வெங்காயத்தில் செயல்விளக்கத் திட்ட வயல் விழா அண்மையில் நடைபெற்றது.

தருமபுரி மாவட்டத்தில் சுமார் ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. வைகாசி பட்டத்தில் மஞ்சளில் ஊடுபயிராகவும், கார்த்திகை பட்டத்தில் தனிப் பயிராகவும் பயிரிடப்படுகிறது. சின்ன வெங்காய சாகுபடியில் நுனிக்கருகலும், இலைப்பேன் போன்ற நோய் தாக்குதலால் உற்பத்தி குறைந்து வருகிறது.

இதற்கு ரசாயன முறை மேலாண்மையை கடைப்பிடிக்கும்போது பூச்சி மருந்துப் தெளிப்பு எண்ணிக்கையும் செலவும் அதிகமாவதால் விவசாயிகளுக்கு வருவாயில் இழப்பு ஏற்படுகிறது.

இந்த நிலையில், அதகப்பாடி கிராமத்தில் விவசாயி வடிவேலின் விளைநிலத்தில் நவீன மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை விவசாயிகளிடம் விளக்கும் வகையில் வயல் செயல்விளக்கத் திடல் அமைக்கப்பட்டது.

இதில், ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை முறைகளான மண்ணில் வேர் உள்பூசனம் இடுதல், பி.ஜி.பி.ஆர். நுண்ணுயிர் கலவை மற்றும் டிரைக்கோடர்மா, விரிடியில் விதைக்கிழங்கு நேர்த்தி, நுனிக் கருகல் மற்றும் இலைப்பேன் மேலாண்மைக்காக பி.ஜி.பி.ஆர். நுண்ணுயிர் கலவை மற்றும் புவேரியா பேசியானா இலைவழி தெளிப்பு, அர்கா நுண்ணூட்டக் கலைவை தெளிப்பு, லத்திப் புழு

மேலாண்மைக்கு இனக்கவர்ச்சி பொறி வைத்தல் ஆகியவை முறை குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டன.

இதில் வேளாண்மை அறிவியல் நிலைத்தின் தலைவர் நா.தமிழ்செல்வன் தலைமை வகித்தார். வேளாண்மை பயிற்சி மையத்தின் துணை இயக்குநர் மேகநாதன், தோட்டக் கலைத் துறை அலுவலர் ஆசைதம்பி, விஞ்ஞானி ம.சங்கீதா, உதவி பேராசிரியர் இந்துமதி, இளநிலை ஆராய்ச்சியாளர் பிரபு, விவசாயி சங்கரலிங்கம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## தக்காளி விலை கடும் வீழ்ச்சி!



விழுப்புரம் மாவட்டத்தில், தக்காளி விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. விவசாயிகளிடம் ஒரு ரூபாய்க்கு தக்காளியை கொள்முதல் செய்யும் மொத்த வியாபாரிகள், மார்க்கெட்டில் கிலோ ரூ.2.50 முதல் ரூ.4 வரை விற்பனை செய்கின்றனர். இந்த கடுமையான வீழ்ச்சி, விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பரவலாக தக்காளி பயிரிடப்பட்டுள்ளது. 6 மாதங்களுக்கு முன்பு, தக்காளி கிலோ ரூ.20 முதல் ரூ.25 வரை விற்பனை ஆனதால், விவசாயிகள் பலர் ஆர்வமுடன் தக்காளியை பயிரிட்டனர்.

இந் நிலையில் தக்காளி விலையில் தற்போது திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது. மார்கெட்டில் தக்காளி ரூ.2.50 முதல் ரூ.4 வரை மட்டுமே விற்கப்படுகிறது. மேலும் மொத்தமாக வியாபாரிகள் கொள்முதல் செய்யும்போது கிலோ ரூ.1-க்கு கூட வாங்குவது இல்லை என்று விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

பெரும் செலவு செய்து தக்காளி பயிரிட்ட விவசாயிகள், தற்போது விலை குறைவால் கடும் நஷ்டத்தை சந்திக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அறுவடை மற்றும் போக்குவரத்து செலவுக்குக் கூட, தக்காளி விலை போகவில்லை என்று அவர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

விவசாயிகள் பாதிக்கப்படுவதை தடுக்க, அரசு கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள்முதல் மற்றும் விற்பனை நிலையங்களை திறக்க வேண்டும், விளைபொருளுக்கு இடைத்தரகர்கள் விலை நிர்ணயிக்கும் நிலை மாற வேண்டும் என்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விரைவில் நிவாரண நிதி: வேளாண்துறை அமைச்சர் செ.தாமோதரன்



டெல்டா பகுதியை தவிர்த்து தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விரைவில் நிவாரண நிதி வழங்கப்படும் என தமிழக வேளாண்துறை அமைச்சர் செ.தாமோதரன் தெரிவித்தார்.

கோவை மாவட்டம், பொள்ளாச்சி அடுத்த புளியம்பட்டியில் தமிழக அரசின் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கும் விழா பொள்ளாச்சி சார் ஆட்சியர் ரேஸ்மி சித்தார்த் ஜெகதே தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

விழாவில் அமைச்சர் செ.தாமோதரன் பேசியது:

தமிழக பட்ஜெட்டில் வேளாண்மை, கல்வி, மருத்துவம், மின் உற்பத்தி, சாலை வசதி, தொழில் வளர்ச்சி, உள்கட்டமைப்பு வசதி ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு உள்ளது.

ஆட்சிக்கு வந்த 2 ஆண்டு காலத்திற்குள் தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளில் 90 சதவீதத்தை தமிழக முதல்வர் நிறைவேற்றி உள்ளார். தமிழ்நாட்டில் ஏற்பட்ட வறட்சி காரணமாக சென்னை தவிர அனைத்து மாவட்டங்களையும் தமிழக முதல்வர் வறட்சி மாவட்டங்களாக அறிவித்துள்ளார்.

டெல்டா பகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரண நிதியாக ரூ.15 ஆயிரம் வழங்கப்பட்டு உள்ளது. இதே போல் தமிழகத்தில் உள்ள மற்ற மாவட்டங்களிலும் ஏற்பட்டுள்ள வறட்சியைக் கணக்கிட அமைச்சர்கள் கொண்ட உயர்நிலைக் குழுவை முதல்வர் அமைத்துள்ளார்.

இக்குழு தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பயிர்களின் பாதிப்பு குறித்து பார்வையிட்டு வருகிறது.

பாதிப்பு குறித்தான அறிக்கையை முதல்வரிடம் வழங்கிய பின், விவசாயிகளுக்கு உரிய நிவாரண நிதி விரைவில் வழங்கப்படும் என்றார்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

22.03.2013 A.M

## தேனி உழவர் சந்தையில் காய்கறி விலை சீரானது

தேனி:தேனி உழவர்சந்தையில் காய்கறி விலைகள் ஒரு வாரமாக சீரான விலையில் விற்கப்படுகிறது.தேனி உழவர்சந்தைக்கு நேற்று 65 விவசாயிகள், 60 வகையான, 35 டன் எடை காய்கறிகளை கொண்டு வந்திருந்தனர். கடந்த மாசி மாதம், காய்கறிகள் விலை அதிகமாக இருந்தது. பங்குனி மாதம் பிறந்ததும், காய்கறி விலைகள் குறைந்தது. பின்னர் கடந்த ஒரு வாரமாக வரத்தும்,விற்பனையும் சீராக உள்ளதால் விலைகளும் சீராக உள்ளது.காய்கறி விலை, கிலோவிற்கு ரூபாயில்: தக்காளி- 10, கத்தரி- 23, உருளைக்கிழங்கு- 20, பச்சை மிளகாய்- 26, முருங்கைக்காய்- 10, பாகற்காய்- 20, வெண்டைக்காய்- 30, சுரைக்காய்- 5, அவரைக்காய்- 18, முருங்கை பீன்ஸ்- 45, பட்டர் பீன்ஸ்- 100, காரட்- 24, சவ்சவ்- 16, பீர்க்கு- 20, சின்னவெங்காயம்- 26, பெல்லாரி- 20, கீரைவகைகள்- 5, தண்ணீர்பழம்- 6.

## கீழக்கரையில் தேங்காய் விளைச்சல் பாதிப்பு விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கவலை

கீழக்கரை:நடப்பாண்டில் மழை பொய்த்ததால் கீழக்கரை பகுதியில் தேங்காய் விளைச்சல் குறைந்து விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் தென்னை விவசாயத்தை பிரதான தொழிலாக செய்து வருகின்றனர். கடந்த ஆண்டு மழை இல்லாததால், நிலத்தடி நீர் மட்டம் குறைந்து விளைச்சல் இல்லாமல் தென்னை விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். காய்த்த காய்களும் வழக்கமான அளவை விட குறைவாக இருப்பதால் மொத்த வியாபாரிகள் விலை குறைத்து கொள்முதல் செய்கின்றனர். கடந்த ஜனவரியில் கொப்பரை கிலோ 49 ரூபாய் வரை விற்கப்பட்டது. தற்போது, 42 ரூபாயாக குறைந்து விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.பெரிய பட்டினம் தென்னை விவசாயி மாலிக் கூறியதாவது: தேங்காய் விலை சரிவு, உற்பத்தி செலவு அதிகரிப்பு காரணமாக ஏராளமான விவசாயிகள் மாற்றுத் தொழிலுக்கு சென்று விட்டனர். சோழவந்தான், நத்தம், திருப்புவனம், கம்பம், ராஜபாளையம் போன்ற ஊர்களிலிருந்து அதிக வரத்து காரணமாக விலை

வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மாவட்டத்தில் நடப்பாண்டில் 50 சதவீதம் விளைச்சல் கூட இல்லாத நிலையில் எதிர்பார்த்த விலை கிடைக்கவில்லை. இதே நிலை நீடித்தால் இந்த பகுதியில் இன்னும் சில ஆண்டுகளில் தென்னை விவசாயம் காணாமல் போய் விடும், என்றார்

## "கார்னேஷன்' பண்ணை அமைக்கும் திட்டத்தில் திடீர் மாற்றம்! காட்டேரிக்கு பதில் தும்மனட்டியில் நாற்று "நர்சரி'

ஊட்டி:குன்னூர் காட்டேரி பண்ணையில், 1.40 கோடி ரூபாயில் துவங்க இருந்த தோட்டக்கலை துறையின் "கார்னேஷன் நர்சரி' அமைக்கும் திட்டம், ஊட்டி தும்மனட்டி தோட்டக்கலை பண்ணைக்கு மாற்றப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில், கடந்த 10 ஆண்டுக்கு முன் தேயிலை விலை வீழ்ச்சி ஏற்பட்ட சமயத்தில், கொய்மலர் சாகுபடியை மேற்கொள்ள, விவசாயிகள் ஊக்குவிக்கப்பட்டனர். அதன்படி, நீலகிரியில் 500க்கும் மேற்பட்ட தேயிலை விவசாயிகள், தங்கள் தேயிலை தோட்டத்தின் ஒரு பகுதியில், பசுமைக் குடில் அமைத்து, கார்னேஷன், ஜெர்பரா, லில்லியம் உட்பட மலர்களை சாகுபடி செய்தனர்; இதில், கார்னேஷன் சாகுபடி தான் பெருமளவில் செய்யப்பட்டது.

சரிவை சரிகட்ட திட்டம்

இந்நிலையில், சிறு, குறு மலர் சாகுபடியாளர்கள் பலர், தங்கள் தோட்டங்களை அடகு வைத்து, வங்கி கடன் பெற்று மலர் சாகுபடியில் ஈடுபட்டனர். தனியார் ஏஜன்டுகளிடம் இருந்து கார்னேஷன் நாற்றுகள் வாங்கி சாகுபடி செய்தனர்.

"இந்த நாற்றுகள், தரமில்லாமல் போனதால், போதிய விளைச்சல் கிடைக்கவில்லை; வங்கி கடன் செலுத்த முடியவில்லை. தொழிலை மேம்படுத்த உதவி செய்ய வேண்டும்' என, சிறு, குறு மலர் சாகுபடியாளர் சங்கம், மாநில அரசை தொடர்ந்து வலியுறுத்தியது.

விளைவாக, மாநில அரசு, தோட்டக்கலை துறை மூலம், மலர் சாகுபடியாளர்கள் பங்களிப்புடன், கார்னேஷன் நாற்றுகளை தயாரித்து, அதன் மூலம் கார்னேஷன் மலர் உற்பத்தியில் விவசாயிகளை ஈடுபட செய்ய வழிவகை செய்தது.

இதன்படி, வெளிநாடுகளில் இருந்து கார்னேஷன் கிழங்குகளை (பல்பு) வாங்கி, நாற்று உற்பத்தி செய்ய, மாநில அரசு 1.42 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது.

இந்த கார்னேஷன் நர்சரியை, குன்னூர் காட்டேரி அரசு பழப்பண்ணையில், துவக்க திட்டமிடப்பட்டது.

இந்நிலையில், காட்டேரி பகுதியில் வன விலங்கு தொல்லை உட்பட சில பராமரிப்பு பிரச்னைகளால், நாற்று நர்சரி, காட்டேரியில் இருந்து தும்மனட்டி தோட்டக்கலை பண்ணைக்கு

திடீரென மாற்றப்பட்டுள்ளது. விரைவில் டெண்டர் விடப்பட்டு, பணிகள் துவங்கும், என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், இந்த மாற்றத்துக்கு குற்றிப்பிட்ட சில நிர்வாக காரணங்களும் உள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

கடன் வசூல்

இதற்கிடையில், சிறு, குறு மலர் சாகுபடியாளர்கள் வாங்கிய வங்கி கடன் நிலுவையில் உள்ளதால், "வங்கி கடனை செலுத்த வேண்டும்' என வங்கிகள், விவசாயிகளை நெருக்கி கொண்டிருக்கின்றன. "வங்கி கடனை செலுத்த கால அவகாசம் வழங்க வேண்டும்' என மலர் சாகுபடியாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**25.03.2013 A.M**

## வறட்சியால் பாதித்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ25 ஆயிரம் நிவாரணநிதி வழங்க பாரதிய ஜனதா கோரிக்கை

ஈரோடு, : ஈரோடு தெற்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சி செயற்குழு கூட்டம் நடந்தது. மாவட்டத் தலைவர் ராஜேஷ்குமார் தலைமை வகித்தார். மாநில பொதுச்செயலாளர் ரமேஷ் சிறப்புரையாற்றினார். மாவட்ட பொதுச்செயலாளர்கள் கவுரிசங்கர், குரு, குணசேகரன், மாவட்ட அமைப்புச் செயலாளர் சிவசுப்ரமணியம், மாவட்ட பொருளாளர் விஸ்வபாலாஜி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு: ஈரோடு நகரின் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வாக, சிஎஸ்ஐ., நிர்வாகம் ஆக்கிரமித்துள்ள புறம்போக்கு நிலத்தை மீட்டு காலந்தாழ்த்தாமல் 80 அடி திட்டச்சாலை திட்டத்தை நிறைவேற்ற உடனடியாக மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஈரோடு மாநகராட்சி எல்லைக்குள்ள பாதாள சாக்கடை திட்டபணிகள் மிகவும் மந்தமாக நடைபெறுவதால் சாலைகள் பழுதடைந்து போக்குவரத்துக்கு லாயக்கற்று உள்ளது. சம்பத்நகர் பிரதான சாலையில் பாதாள சாக்கடை அமைத்து பல மாதமாகியும் சாலை சீரமைக்காமல் உள்ளது. எனவே பாதாள சாக்கடைக்காக தோண்டிய குழிகளை மூடி சாலை அமைக்கவும், பாதாள சாக்கடை திட்டப்பணிகளை விரைந்து முடிக்கவும் மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நடப்பாண்டு பருவமழை பொய்த்து போனதால் மாவட்டம் முழுவதும் கடும் வறட்சி நிலவுகிறது. வறட்சியால் விவசாயிகள் கடும் பாதிப்பை சந்தித்து வருகின்றனர். எனவே வறட்சி நிவாரணமாக ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வீதம் இழப்பீட்டு தொகையை அரசு வழங்க வேண்டும்.

கூட்டுறவு சங்க தேர்தல் நடத்துவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. ஆளுங்கட்சியின் குறுக்கீடு இன்றி நியாயமாகவும், நேர்மையாகவும் கூட்டுறவு சங்க தேர்தலை அரசு நடத்த வேண்டும்.

கொச்சி- பெங்களூர் இடையிலான எரிவாயு குழாய் அமைக்கும் திட்டத்தை தேசிய நெடுஞ்சாலை

வழியாக அமைக்க கெயில் நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு பின்புறம் உள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அலுவலகம் முதல்மாடியில் இயங்கி வருகிறது. மாடிப்படியேறி மாற்றுத்திறனாளிகள் செல்ல முடியாமல் அவதிப்படுவதால் தரைத்தளத்திற்கு இந்த அலுவலகத்தை மாற்றியமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## விளை நிலங்களில் அரைகுறையாக பண்ணைகுட்டை அமைப்பதா

கீழ்வேளூர், : நாகை மாவட்டத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தில் விவசாய நிலங்களில் அமைக்கப்படும் பண்ணைக்குட்டைகளை முழுமையாக அமைத்துத் தர வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
நாகை மாவட்டத்தில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு பண்ணை குட்டை தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் அமைத்து தருவதாக அரசு அறிவித்துள்ளது. முழுவதும் மனித உடல் உழைப்பால் ரூ. ஒன்றரை லட்சம் செலவில் அமைத்துக் கொள்ளலாம் என்றும் அரசு அறிவித்துள்ளது. இந்த பண்ணை குட்டையின் அளவு 15 மீட்டர் அகலம், 15 மீட்டர் நீளம், ஒன்றை மீ ஆழம். அதிக பட்சமாக 30 மீ அகலம், 30 மீ நீளம், 1 மீ என்ற அளவையில் வெட்டப்படுவதாக கூறப்படுகிறது. இதற்கு 20 முதல் 30 சென்டு வரை நிலம் தேவைப்படுகிறது. 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் ஒரு ஆள் கடின மண் பகுதியாக இருந்தால் 10 அடி நீளம், நான்கரை அடி அகலம், 1 அடி ஆழம் என்று 43 கன அடியிலும், சாதாரணமான மண் என்றால் 56 கன அடி அளவில் வேலை செய்ய வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
இந்த அடிப்படையில் தொழிலாளர்கள் வேலை செய்வார்களா? என்பது கேள்விக்குறியாக உள்ளது. அரசு அறிவித்துள்ள அளவுகோல் அடிப்படையில் நில உரிமையாளர்கள் பண்ணை குட்டை வெட்டத் தயாராக உள்ளனர். ஆனால் விவசாயிகள் எதிர்பார்ப்பது அரசு அறிவித்துள்ள அளவில் பண்ணை குட்டை இருக்க வேண்டும். தொகை மதிப்பீடு என்பது 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும்.
இதுகுறித்து தமிழ்நாடு விவசாய சங்க ஒன்றிய செயலாளர் அம்பிகாபதி கூறுகையில், 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வெட்டி தரப்படும் பண்ணை குட்டைக்கு விவசாயிகள் 40 செண்டு இடம் வழங்க தயாராக உள்ளனர். கொடுத்த இடத்தில் அரசு நிர்ணயம் செய்துள்ள அளவில் பண்ணை குட்டை அமைத்து தரவேண்டும். ஆனால் அரசு நிர்ணயம் செய்த அளவு இல்லாமல் தொகையை கொண்டு அரை குறையாக பண்ணை குட்டை அமைந்து விட்டால்

விவசாயமும் செய்ய முடியாமல், மீன்களும் வளர்க்க முடியாத நிலை ஏற்பாட்டால் விவசாயிகளுக்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட குழு உறுப்பினர் மகாலிங்கம் கூறும்போது, தண்ணீரை சேமித்து வைத்து விவசாயம் செய்ய சிறு, குறு விவசாயிகளுக்கு பண்ணை குட்டை அமைத்து தருவதாக அரசு கூறுகிறது.

இதற்கு 30 செண்டு நிலத்தில் வெட்டப்படும் பண்ணை குட்டையின் அளவில் குறைபாடாக வெட்டி தந்தால் விவசாயிகளுக்கு பெரிய ஏமாற்றமே ஏற்படும். எனவே முழு அளவில் பண்ணை குட்டை அமைத்து தர வேண்டும் என்றார்.

இதுகுறித்து விவசாயி நடராஜன் கூறுகையில், 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தில் பண்ணை குட்டை அமைக்கும்போது அரசு நிர்ணயம் செய்துள்ள அளவில் பண்ணை குட்டை அமைக்கத்தான் விளை நிலத்தை விவசாயிகள் கொடுக்கின்றனர். இதில் அரசு தொகை என்பதை பார்க்காமல் அரசு கூறியுள்ள நீளம், அகலம், ஆழம் என்பதை மையமாக கொண்டு அரசு கூறியுள்ள முழு அளவில் பண்ணை குட்டை அமைத்து தர வேண்டும் என்றார்.

அரசு அறிவித்துள்ள பண்ணை குட்டையில் ஒரு மீட்டர் அளவை 2 மீட்டராக அதிகரிக்க வேண்டும்.

இன்றைய வேளாண் செய்திகள்
25.03.2013 A.M

## கடல்வழி போக்குவரத்து செலவினம் அதிகரிப்பு: நாமக்கல் மண்டலத்தில் முட்டை ஏற்றுமதி அடியோடு பாதிப்பு கோழிப்பண்ணையாளர்கள் கவலை

நாமக்கல்,

கடல்வழி போக்குவரத்துக்கான செலவினம் அதிகரித்ததை தொடர்ந்து, நாமக்கல் மண்டலத்தில் இருந்து வெளிநாடுகளுக்கு முட்டை ஏற்றுமதி அடியோடு பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் கோழிப்பண்ணையாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் கவலை அடைந்துள்ளனர்.

3½ கோடி முட்டை உற்பத்தி

நாமக்கல் மண்டலத்தில் 1,100–க்கும் மேற்பட்ட கோழிப் பண்ணைகள் உள்ளன. இவற்றில் 4½ கோடிக்கும் மேற்பட்ட முட்டையின கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 3½ கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இந்த முட்டைகள் கேரளாவுக்கு 90 லட்சம், தமிழக அரசின் சத்துணவு திட்டத்திற்கு 50 லட்சம், வெளிநாடுகளுக்கு 50 லட்சம் என அனுப்பப்பட்டு வந்தன. மற்ற முட்டைகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

ஏற்றுமதி அடியோடு பாதிப்பு

முட்டை ஏற்றுமதியில் நாமக்கல் மண்டலம் இந்திய அளவில் முதலிடத்தில் இருந்து வந்தது. அப்போது உலக சுகாதார அமைப்பில் அங்கம் வகிக்கும் துபாய், குவைத், மஸ்கட், தோகா உள்ளிட்ட 11 நாடுகளுக்கு இந்த மண்டலத்தில் இருந்து அதிக அளவில் முட்டைகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. ஆனால், இந்த நாடுகள் இந்தியாவில் ஏதாவது ஒரு மூலையில் ஏற்படும் பறவை காய்ச்சல் நோயை காரணம் காட்டி, படிப்படியாக இந்திய முட்டைக்கு தடை விதித்தன. இதனால் இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் முட்டைகளின் அளவும் நாளுக்கு நாள் குறைய தொடங்கியது.

தற்போதைய சூழ்நிலையில் தென்ஆப்பிரிக்கா, ஆப்கானிஸ்தான், நைஜீரியா போன்ற உலக சுகாதார அமைப்பில் அங்கம் வகித்தாத நாடுகளுக்கு மட்டுமே முட்டை ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. ஆனால், கடந்த ஜனவரி மாதம் மத்திய கப்பல் போக்குவரத்து துறை கடல்வழி போக்குவரத்துக்கான வாடகையை உயர்த்தியது. இதனால் நாமக்கல் மண்டலத்தில் இருந்து வெளிநாடுகளுக்கு முட்டை ஏற்றுமதி அடியோடு பாதிக்கப்பட்டு உள்ளது.

நாமக்கல் மண்டலத்தில் இருந்து கடந்த ஆண்டு கடைசியில், அதாவது டிசம்பர் மாதம் 8 கோடியே 97 லட்சம் ஆயிரம் முட்டைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. அது கடந்த ஜனவரி மாதம் 3 கோடியே 16 லட்சமாக குறைந்தது. கடந்த மாதம் (பிப்ரவரி) 56 லட்சத்து 68 ஆயிரமாக சரிவடைந்து உள்ளது. இது பண்ணையாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களை கவலையில் ஆழ்த்தி உள்ளது.

<u>காரணம் என்ன?</u>

இதுகுறித்து ஏற்றுமதியாளர்கள் கூறியதாவது:–

நாமக்கல் மண்டலத்தில் உற்பத்தி செய்யப்படும் முட்டைகள் கண்டெய்னர் லாரி மூலம் துறைமுகங்களுக்கு எடுத்து செல்லப்பட்டு, அங்கிருந்து கடல் வழியாக கப்பலில் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படும். இந்த நிலையில் மத்திய கப்பல் போக்குவரத்து துறை கடந்த ஜனவரி மாதம் 1–ந் தேதி கடல்வழி போக்குவரத்திற்கான வாடகையை அபரீதமாக உயர்த்தி விட்டது. இதனால் ஒரு கண்டெய்னருக்கு 1,500 டாலர் வரை அதிகம் செலுத்த வேண்டி உள்ளது. அவ்வாறு செலுத்தும் போது, முட்டைக்கான விலையை அதிகரிக்க வேண்டும். ஆனால் பிற நாடுகள் நம்மை விட குறைவான விலைக்கு முட்டைகளை சப்ளை செய்து விடுகின்றன. எனவே, நமக்கு ‘‘ஆர்டர்ஸ்’’ கிடைப்பது இல்லை. இதுவே ஏற்றுமதி அடியோடு பாதிக்க காரணம் ஆகும். இவ்வாறு அவர்கள் கூறினார்.